පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
14 ஆம் மாடி, சுகுறுபாய, பத்தரமுல்லை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිනය<br>திகதி<br>Date | 14.08.2026<br>நேரம் 1610 | දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2887973 | මගේ අංකය<br>எனது இலக்கம்<br>My No | D/Media/out/1317/26 | ඊ මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | dir.media@police.gov.lk |

**தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்,**
**செய்தி பணிப்பாளர்/ செய்தி முகாமையாளர்**
**சகல ஊடக நிறுவனங்கள்.**

## வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி எசல பெரஹெரா 2026 – இலங்கை பொலிஸ் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டம்.

வருடாந்தம் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி எசல பெரஹெரா உற்சவம், இம்முறையும் **2026.08.18 ஆம் திகதி முதல் 2026.08.28 ஆம் திகதி வரை**, அரச அனுசரணையுடன் மிகவும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

**2026.08.18 முதல் 2026.08.22 வரை** தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் கும்பல் பெரஹெரா நடைபெறவுள்ளது. **2026.08.23 முதல் 2026.08.27 வரை** ரந்தோலி பெரஹெரா வீதி உலா நடைபெறும். **2026.08.28 ஆம் திகதி பகல் பெரஹெரா** நடைபெறுவதுடன் எசல மகா பெரஹெரா நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன.

பெரஹெரா நடைபெறும் காலப்பகுதி முழுவதையும் உள்ளடக்கும் வகையில் **இலங்கை பொலிஸ் விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டம்** நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் கீழ் வீதித் தடைகள் அமைத்தல், பாதுகாப்புப் பணிகள், வாகனங்கள் மற்றும் நபர்களைப் பரிசோதித்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பெரஹெராவின் பாதுகாப்புப் பணிகளுக்காக **6,200 பொலிஸ் அதிகாரிகள், 564 பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகள், 1,200 முப்படையினர் மற்றும் 29 சிவில் பாதுகாப்பு அதிகாரிகள்** ஈடுபடுத்தப்படவுள்ளனர். மேலும், பாதுகாப்புப் பணிகளுக்காக **பொலிஸ் மோப்ப நாய்களின் உதவியும்** பெறப்படவுள்ளது.

தலதா பெரஹெரா நடைபெறும் காலப்பகுதியில் கண்டி நகருக்குள் நுழையும் **14 இடங்களை உள்ளடக்கும் வகையில் வீதித் தடுப்புப் பணிகள்** மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளது.

பொதுமக்களின் வசதிக்காக வாகனங்களை நிறுத்துவதற்கு 13 **வாகனத் தரிப்பிடங்கள்** ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் 06 **இலகு வாகனத் தரிப்பிடங்களும்**, 07 **கனரக வாகனத் தரிப்பிடங்களும்** அடங்கும்.

## மாற்று வீதிகள்

பெரஹெரா நடைபெறும் காலப்பகுதியில் கண்டி நகரைத் தவிர்த்து பயணிப்பதற்கு சாரதிகள் பின்வரும் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

- **கட்டுகஸ்தோட்டை முதல் பேராதனை ஊடாக கொழும்பு, நுவரெலியா திசையில் பயணிக்கும் வாகனங்கள்** – கட்டுகஸ்தோட்டை பாலத்திற்கு அருகிலிருந்து கோஹாகொட வீதி ஊடாக பேராதனைக்குச் செல்ல முடியும்.
- **கொழும்பிலிருந்து கண்டி ஊடாக குருநாகல், மாத்தளை, மஹியங்கனை வீதியில் பயணிக்கும் வாகனங்கள்** – பேராதனை–கோஹாகொட வீதி ஊடாக வந்து குருநாகல், மாத்தளை அல்லது மடவளை ஊடாக மஹியங்கனை வீதியில் பயணிக்க முடியும்.
- **கண்டியிலிருந்து மஹியங்கனை, பதுளை திசையில் பயணிக்கும் வாகனங்கள்** – மஹய்யாவ சுரங்கப்பாதைக்கு அருகிலிருந்து தர்மாசோக மாவத்தை ஊடாக தென்னேகும்புர வழியாக பதுளை மற்றும் மஹியங்கனை திசையில் பயணிக்க முடியும்.

## இலகு வாகனத் தரிப்பிடங்கள்

- KMC வாகனத் தரிப்பிடம்
- கரலிய வாகனத் தரிப்பிடம்
- எஹலேபொல குமாரிஹாமி மாவத்தை வாகனத் தரிப்பிடம்
- சஹஸ் உயன வாகனத் தரிப்பிடம்
- புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள வாகனத் தரிப்பிடம்
- கன்னொருவ வீதியில் ஒரு பக்கத்திலுள்ள வாகனத் தரிப்பிடம்

## கனரக வாகனத் தரிப்பிடங்கள்

- டொரிங்டன் பேருந்து நிலையம்
- போகம்பரை பேருந்து நிலையம்
- அலுத்கம தம்மானந்த மாவத்தை வாகனத் தரிப்பிடம்
- கடிகாரக் கோபுர பேருந்து நிலையம்
- புகையிரத நிலைய சந்தியிலிருந்து சிறுவர் இல்ல வீதி வரையிலான வாகனத் தரிப்பிடம்
- போகம்பரை சிறைச்சாலைக்கு உட்புறத்திலுள்ள வாகனத் தரிப்பிடம்
- YMBA அருகிலுள்ள ராஜபிஹில்ல பேருந்து தரிப்பிடம்

**கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் வரலாற்றுச் சிறப்புமிக்க எசல பெரஹெராவைக் காண வருகை தரும் அனைவரும், தேசிய கலாசாரத்திற்கு மதிப்பளித்து, பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் தூய்மையைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.**

*மேலும், பொதுமக்களின் பாதுகாப்பிற்காக 24* **மணிநேரமும் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு தங்களது ஒத்துழைப்பை வழங்குமாறும்** *இலங்கை பொலிஸ் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறது.*

*மேற்குறிப்பிட்ட அறிவித்தலை பொதுமக்கள் மற்றும் சாரதிகளின் கவனத்திற்குக் கொண்டு வரும் வகையில் தங்களது ஊடக நிறுவனத்தின் மூலம் விளம்பரம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

***பொலிஸ் ஊடகப் பிரிவு***